## கொத்மலை பிரதேச சபை

## நுவரஎலிய மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுலை 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 28 திகதி நகர சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, கொத்மலை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் நிர்மாண வேலை கடன் கொடுத்தோர்களின் பெறுமதி ரூபா 28,829,163 ஆக காணப்பட்டதுடன் பட்டோலைகளின் பிரகாரம் அவை ரூபா 30,916,280 ஆக காணப்பட்டமையால் ரூபா 2,087,117 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்படுகின்றது.

1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

-------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 28,829,163 இற்கான நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதியில் இருந்து 2011 ஆண்டு முதல் மத்திய அரசில் இருந்து பெற வேண்டிய தொகை ரூபா 1,073,816 ஆகும். அப் பணம் சபைக்கு கிடைப்பதற்கான சான்றுகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,047,939 ஆகும்.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,182,728 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,212,681 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,029,953 இனால் வருமானத்தில் வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு,

| வருமான விடயம் | 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் | 2014 ஆண்டின் போது பில் போடப் பட்ட வருமானம் | 2014 ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் | வருமானம் சேகரித்தல்: 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானத்தில் இருந்து | வருமானம் சேகரித்தல்: 2014 பில் போடப்பட்ட வருமானத்தில் இருந்து | வருமானம் சேகரித்தல்: சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் | நிலுவை வருமானம்: 2014.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானத்தில் இருந்து | நிலுவை வருமானம்: 2014 பில் போடப்பட்ட வருமானத்தில் இருந்து | நிலுவை வருமானம்: மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 1,490,555 | 3,130,811 | 4,621,366 | 1,217,155 | 2,509,258 | 3,726,413 | 273,399 | 621,553 | 894,952 |
| ஏக்கர் வரி | 108,570 | 64,841 | 173,411 | 35,018 | 53,001 | 88,019 | 73,552 | 11,840 | 85,392 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | - | 2,643,882 | 2,643,882 | - | 2,643,882 | 2,643,882 | - | - | - |
| வீட்டு வாடகை | 7,942 | 48,535 | 56,470 | 192 | 48,451 | 84,643 | 7,750 | 84 | 7,834 |
| நீர்க் கட்டணம் | 895,813 | 833,670 | 1,629,843 | 203,830 | 474,470 | 678,300 | 691,983 | 259,200 | 951,183 |
| கடை வாடகை | 78,834 | 1,188,000 | 1,266,834 | 1,000 | 1,188,000 | 1,189,000 | 77,834 | - | 77,834 |
| வியாபார வரி | - | 351,550 | 351,550 | - | 351,550 | 351,550 | - | - | - |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 07 இன் பிரகாரம் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் சபையினால் முறையான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வியாபாரிகளின் பெயர்களை அனுமதிபத்திர பதிவேட்டில் உட்படுத்தி கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 892,601 இற்கான அறவிடப்பட வேண்டிய வீதவரி தொகை ஒன்று காணப்பட்ட போதும் அது தொடர்பாக 1988 பிரதேச (நிதி, நிருவாகம்) விதி கோவை 33 ஆவது விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வருடாந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரம் தொடர்பாக கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், வழங்கியிருந்த 26 சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை நாளதுவரை ஆக்கப்படாமையால் சபைக்கு ரூபா 96,800 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(ஈ) 1986 ஆண்டு முதல் நிலுவை இறைச்சிக் கடை வாடகையாக வாடகையாளரிடம் பெற வேண்டியிருந்த ரூபா 78,500 இற்கான தொகை ஒன்றினை மீளாய்வாண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3 மிகை விதிப்பு

----------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்பின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 77,490 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

--------------------------------------

வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினை இணங்க குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிருவாக அறிக்கையின் மூலம் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றுகையுடன் ஒப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

(அ) 1988 பிரதேச சபை(நிதி, நிருவாக) விதி இலக்கம் 218 ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக பற்றி வருடாந்த பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி உறுதிகள் மற்றும் வரைபுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் ரூபா 50,957,068 இற்கான காணிகள் மற்றும் கட்டடங்களின் சட்டரீதியான உரிமை மற்றும் உண்மையாக விளைவினை உறுதிப்படுத்துவதற்காக முடியாதிருந்தது.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2014 ஆண்டின் போது 138 அங்கிகாரமற்ற நிர்மாண வேலைகள் இடம் பெற்றுள்ள போது அது தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

---

(அ) கொத்மலை புது நகரத்தில் காணப்படும் வாராந்த சந்தை கட்டடம் 06 வருட காலமாக பயன்படுத்தப்படாமல் காடுகள் வளர்ந்து காணப்பட்ட போதும் அதனை பராமரிப்பதற்கு அல்லது குறிப்பிட்ட குறிக்கோளின் படி பயன்படுத்துவதற்கு சபை எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலக்கம் JD – 4866 கொண்ட நிஸான் கரவன் இனத்தை சேர்ந்த நோயாளர் காவு வண்டி 2010 ஆண்டு முதல் 05 வருடங்களை மிகையான காலம் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டு அலுவலக வளவில் நிறுத்தப்பட்டு காணப்பட்டுள்ளது.

3.4 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---

பிரதேச சபையினால் திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான முறையான நடைமுறை ஒன்றினை கடைபிடித்திருக்கவில்லை. அத்துடன் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் விதமாக குப்பைகளை அகற்றும் நிலைமை ஒன்று காணப்பட்டது.

4 கணக்களி பொறுப்பும் நல்லாட்சியும்

---

4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள்

---

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

அரச கொள்வினை வழிகாட்டல் கோவையின் 4:2 பந்தியின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

---

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜுன் 09 திகதிய டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிருவனத்தில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று காணப்படவில்லை.

4.4 பாதிட்டுக் கட்டுப்பாடு

-------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 06 வருமான விடயங்களில் நூற்றிற்கு 16% முதல் நூற்றிற்கு 72% வரையும், 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 05% முதல் நூற்றிற்கு 748% வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் நிருவாகம்